போலீசாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களில் 21 வயதுக்குட்பட்டவர்கள்

***404 கேள்வி.—திரு. சா. கணேசன்** : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தியவர்கள் மீது போலீஸ் அல்லது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் மாண்டவர்கள் 21 வயதும் அதற்கு இளையவர்களுமாய் உள்ளவர்கள் எண்ணிக்கை ஜில்லாவாரியாக எவ்வளவு?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அண்மையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது இறந்தவர்களில் 21 வயதும் அதற்குக் குறைந்த வயதுள்ளவர்களின் எண்ணிக்கை மாவட்டவாரியாகப் பின்வருமாறு:—

1	தென் ஆர்க்காடு	1
2	திருச்சிராப்பள்ளி	2
3	மதுரை	3
4	வட ஆர்க்காடு	4
5	சேலம்	4
6	கோயம்புத்தூர்	2
	மொத்தம் ..	16

The district-wise figures in respect of persons, aged 21 and below who died during the recent Anti-Hindi agitation are as follows :—

(1)	South Arcot	1
(2)	Tiruchirappalli	2
(3)	Madurai	3
(4)	North Arcot	4
(5)	Salem	4
(6)	Coimbatore	2
	Total ...	16

திரு. முனு. ஆதி (உட்கார்ந்துகொண்டே) : நான் சென்ற மூன்று குவெஸ்டியன்களாகக் கையை தூக்கிக்கொண்டே இருக்கிறேன். என்னைக் கூப்பிடவே இல்லை.

கனம் சபாநாயகர் : அதற்கு என்ன பண்ணுகிறது? எல்லோரும் தான் கையைத் தூக்குகிறார்கள். டைம் ஆகிவிட்டது.

திரு. முனு. ஆதி (உட்கார்ந்துகொண்டே) : நான் திரும்பி திரும்பிப் பார்த்து கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறேன். என்னைக் கூப்பிடவே இல்லை.

கனம் சபாநாயகர் : கை தூக்கிக்கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் கூப்பிடுவது என்பது முடியாது.

திரு. முனு. ஆதி (உட்கார்ந்துகொண்டே) : கூப்பிட்டவர்களையே கூப்பிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். நான் மூன்று கேள்விகளாகக் கையைத் தூக்கியும், பக்கத்திலிருக்கும் என்னைக் கூப்பிடவே இல்லை.

MR. SPEAKER : It is out of order.

SRI MUNU ADHI : Let it be.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் உட்கார்ந்து கொண்டே பேசுவது அழகல்ல.

கனம் சபாநாயகர் : அதோடுமட்டுமல்லாமல், அவர் சொல்லு வதும் நியாயமில்லை. அதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர் கிறார்களா என்று கேட்கிறேன். Let the hon. Member rise from his seat and express regret for it.

திரு. முனு. ஆதி : நான் பல முறை கையைத் தூக்கியும் சபா நாயகர் அவர்கள் எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. நான் நல் லெண்ணத்தோடு தான் சொன்னேன். வேண்டுமென்று சொல்ல வில்லை. நான் கேட்டது தவறு என்பதை உணர்ந்து நான் வருந்துகிறேன்.

திரு. சா. கணேசன் : மாணவர்கள் தொகை 21 வயதுக்குக்கீழ் பட்டவர்கள் ஜில்லா வாரியாக 2, 3, 4 என்று கணக்கிட்டு, 16 என்று தெரிவித்தார்கள். பத்திரிகையிலே பார்க்கிறபொழுது எண்ணிக்கை வேறுபடுகிறது. ஆகவே, சர்க்கார் சொல்வது, அல்லது முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது தவறு அல்லது பிழை என்றெல்லாம் நான் சொல்ல முன்வரவில்லை. முன்வர மாட்டேன். இப்படி வேறுபடுவதற்குக் காரணம் என்ன என்ப தை இதுவரை அரசாங்கம் ஆலோசனை செய்யாவிட்டால், அதை ஆலோசித்து ஏன் இம்மாதிரி வேறுபாடுகள் ஏற்படுகின்றன என் பதைத் தெரிந்து, அதற்கு ஆவன செய்ய முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பத்திரிகைகளில் வரும் விளக் கங்களுக்கு நான் பொறுப்பு அல்ல, அரசாங்கமும் பொறுப்பு அல்ல. அவர்கள் ஏதோ தகவல் கிடைத்து எழுதுகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி இரண்டு பேர்கள் மாண்டார்கள் என்று பத்திரிகையில் போட்டார் கள். நான் கூடப் பத்திரிகையைப் பார்த்து நம்பினேன். அதில் இந்திய ரேடியோவில் கூட இரண்டு பேர்கள் மாண்டார்கள் என்று தெரிவித்தார்கள். அதற்கப்புறம் பார்த்ததில் ஒருவர் தான் மாண்டிருக்கிறார். அம்மாதிரித் தவறுதல்கள் ஏற்படுகின்றன.

திரு. சா. கணேசன் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து நிகழ்ச்சி யைப் பற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று வரையிலே அங்கு இருந்து வருகிற மாணவர்கள், இருவர் தான் இறந்தார்கள் என்று சொல்லுகிறார்கள், பெயரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒருவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். உண்மை ஆண்டவனுக்குத் தான் தெரியும். ஆகவே, பத்திரிகைகளில் இப்படி எண்ணிக்கை வரு வதை வைத்தாவது இது சரிதானா, இல்லையா என்று இலாகா மூல மாவது விசாரித்து இதனுடைய உண்மை அல்லது பிழையைத்

1st April 1965]

தெரியவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று நான் எண்ணு கிறேன். அந்த வகையிலே அரசாங்கம் முயற்சித்ததா என்று தான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் புள்ளிவிவரங்கள் வெளியிடுகிறபொழுது நன்றாக விசாரித்து, அவர்களுக்குத் தெரிந்த புள்ளிவிவரங்களைத் தான் வெளியிடுகிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி

* 405 கேள்வி.—திரு. பி. முருகையன்
திரு. ஆ. துரை அரசன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடந்த மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் உயிர் இழந்த மாணவர்கள் குடும்பத்திற்கும், பொதுமக்கள் குடும்பத்திற்கும் ஏதேனும் உதவி செய்யும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உயிர் இழந்த மாணவர் ராஜேந்திரன் அவர்களுடைய குடும்பத் திற்கு டாக்டர் சி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் நன்கொடை கொடுக்க முன்வந்துள்ளார்கள். ராம் கேப்ரியல், முத்தையா ஆகியோர்கள் சம்பந்தமாகவும் நன்கொடை கொடுத்திருக்கிறோம். ஆகவே, போலிஸ்காரருடைய பிள்ளைக்கு இந்தச் சர்க்கார் சார்பில் நன்கொடை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார் களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இப்பொழுது அளித்த விடையை விட வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : துப்பாக்கிச் சூட்டின் காரணமாக நிரபராதிகள் இருக்கக்கூடும் என்பதை இந்த அரசாங்கம் ஆராய்ந்ததா ? அப்படி ஆராய்ந்து அவர்களுடைய குடும்பத் திற்கு உதவி நிதி அளிக்க முன்வருமா, முன்வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிரபராதிகள் இருக்கலாம், இதிலே கலந்து கொண்டவர்களாகவும் இருக்கலாம். கூட்டத்திலே வந்து சேர்ந்தவர்களும் இதிலே பாதிக்கப்பட்டிருக்கலாம். கல்லை எடுக்கப் போனபொழுது சுடப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரித் தகவல்களும் இருக்கின்றன. ஆனால் யாருக்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது நிலைமையை ஆராய்ந்து அந்த வகையில் அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. ப. உ. சண்முகம் : இந்தச் சம்பவங்களில் வயதானவர் களும் சுடப்பட்டிருக்கிறார்கள், குழந்தைகளும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். வயதானவர்கள் கலவரங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்று